ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 42/17 — 1973 ජනවාරි 15 වැනි සඳුදා — 1973.01.15

42/17 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு சனவரி மாதம் 15 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிள்யூ. 68(22)/73.

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின் மேல், சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

கொழும்பு, சனவரி 15, 1973.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (நெற்காணிகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. எதாயினும் இடப்பரப்புக்கான பயிர்ச்செய்கைக் குழுவொன்றின் உறுப்பினர்களது பதவிக்காலம் 1971, மார்ச்சு 16 ஆந் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் முடிவடைந்துள்ளவிடத்து, சட்டத்தில் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளில் முரணாக எது எவ்விதமிருப்பினும்; பயிர்ச்செய்கைக் குழுவின் அத்தகைய உறுப்பினர்கள் அவ்விடப்பரப்புக்கென முறையாக அமைக்கப்பட்ட பயிர்ச்செய்கைக் குழுவாகப் பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும் :

ஆயின், சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளை அத்தகைய நெற்காணிக்குழு மீறினால், அத்தகைய எதேனும் குழுவை ஆணையாளர் கலைக்கலாம்.

3. 1971, மார்ச்சு 16 ஆந் நாளுக்கு முன்னர், எதாயினும் இடப்பரப்புக்கான எதாயினும் பயிர்ச்செய்கைக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் காலப்போக்கின் காரணமாக முடிவடைந்துள்ளவிடத்து, அல்லது எதாயினும் ஓர் இடப்பரப்புக்கென குழுவின் உறுப்பினர்கள் விலகியதன் காரணமாக அது பணியாற்ற முடியாதவிடத்து, அப்பொழுது அவ்விடப்பரப்புக்கான ஒரு புதிய குழு அமைக்கப்படும்வரையில், ஆணையாளர் அல்லது அதன் சார்பாக ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட யாராயினும் ஆள், சட்டத்தின் கீழ் அல்லது வேறேதாயினும் எழுத்து மூலமான சட்டத்தின் கீழ், அவ்விடப்பரப்பு தொடர்பில் ஒரு பயிர்ச்செய்கைக் குழுவின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகிய எல்லாவற்றையும் அல்லது அவற்றிலெதனையும், பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

4. சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க, எதாயினும் இடப்பரப்புக்கான நெற்காணிகள் பதி வேட்டின் மீளாய்தல் 1971, யூன் 1 ஆந் நாளுக்கு முன்னர் தொடங்கவிருக்குமிடத்து, அப்பொழுது சட்டத்தில் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளில் முரணாக எது எவ்விதமிருப்பினும், அத்தகைய மீளாய்தல் எதனையும் மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 1971, மே 31 ஆந் நாளன்று வலுவி லிருந்த நெற்காணிகள் பதிவேடு, செல்லுபடியானதும் முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான பதிவேடாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க, அத்தகைய பதிவேடு, 1971, யூன் 1 ஆந் நாளன்றும் அதற்குப் பின்னரும் வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும் :

ஆயின், குறித்த எதாயினும் விடயத்தின் சூழ்நிலைகளில், எதாயினும் இடப்பரப்புக்கான முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட நெற்காணிகள் பதிவேடொன்றை மீளாய்தல் அவசியமானதென ஆணையாளர் அபிப் பிராயப்படுமிடத்து, சட்டத்தில் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளில், அத்தகைய மீளாய்தலுக்கான நடவடிக்கைமுறை தொடர்பாக முரணாக எது எவ்விதமிருப்பினும், மீளாய்தலுக்கு அவசிய மானவையென அவர் கருதும் அத்தகைய நடவடிக்கைகளை அவர் எடுக்கலாம்; அத்துடன், அவ்விதம் மீளாயப் பட்ட பதிவேடு, எல்லா நோக்கங்கட்கும், அவ்விடப்பரப்புக்கான நெற்காணிகள் பதிவேடெனக் கருதப்படுதல் வேண்டும்.

5. இவ்வொழுங்கு விதிகளில்—

"சட்டம்" என்பது 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற்காணிகள் சட்டம் எனப் பொருள்படும்.

"ஆணையாளர்" என்பது கமத்தொழிற் சேவைகள் ஆணையாளர் அல்லது கமத்தொழிற் சேவைகள் பிரதி ஆணையாளர் ஒருவர் எனப் பொருள்படுவதுடன், எந்த மாவட்டங்களுக்கு நியமிக்கப் பட்டனரோ அந்த மாவட்டங்களில் ஆணையாளரின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் கமத்தொழிற் சேவைகள் உதவி ஆணையாளர்கள் எல்லோரையும் உள்ளடக்கும்; அத்துடன்

"பயிர்ச்செய்கைக் குழு" என்பது சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஒரு பயிர்ச் செய்கைக் குழுவெனப் பொருள்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது